தமிழ் நாடு சட்டப் பேரவை

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் கூடும் ஐந்தாவது சட்டப் பேரவையின் மூன்ருவது கூட்டத் தொடர்.

வியாழக் கிழமை, 1971 அக்டோபர் 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் அமைச்சர் திரு. கே. மாதவ மேனன் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1947-ஆம் ஆண்டு முதல் 1952-ம் ஆண்டுவரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ் நாட்டின் அமைச்சராக இருந்த திரு. கே. மாதவ மேனன் அவர்கள் 1-9-1971 அன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும், அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.

2. வினக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினக்கள்.

வ. உ. சிதம்பரம் பிள்ளை பிறந்த நாள்.

*1 **வினு—திரு. எம். முத்தையா** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:—

வ. உ. சிதம்பரம் பிள்ளை பிறந்த தினத்தை முன்னிட்டு அரசாங்க விடுமுறை விடும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மறைந்த மாமேதை வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தேச விடுதலைக்காக அயராது உழைத்ததன் காரணமாக அன்னாருடைய தியாகத்தை